தமிழகமெனும் அமைதிப்பூங்கா

தமிழகமெனும்
அமைதிப் பூங்கா

வெளியிடுபவர் :

இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.35

'தமிழரசு' இலவச வெளியீடு

மே 2000

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

தமிழரசு அச்சகம்,
சென்னை-600 002.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து, 15–5–2000 அன்று சட்டப்பேரவையில் ஆற்றிய உரை.

காவல்துறை மற்றும் அதன் தொடர்பான துறைகள் குறித்து இரண்டு நாட்களாக எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 19 பேர் உரையாற்றி, நான் என்னுடைய விளக்கத்தைக் கூறுகின்ற வாய்ப்பைப் பெற்று இந்த அவையில் சில கருத்துக்களை எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன். முதலில் நம்முடைய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் காவல் துறைக்கு ஒரு கம்ப்யூட்டர் 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருப்பதாகச் சொல்லி இது அதிக விலை என்று குறிப்பிட்டார்கள். ஏனென்றால் தலைப்புச் செய்தியாக அதுதான் வரும் என்ற காரணத்தால் அதைப்பற்றிய விளக்கத்தை முதலிலேயே கொடுத்துவிட நான் விரும்புகின்றேன்.

80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டது பிரதான கம்ப்யூட்டர் மாத்திரம் அல்ல. கம்ப்யூட்டர் அத்துடன் இணைந்து பிரிண்டர், மோடம், நெட் வொர்க் தொடர்பு, பெரிய கம்ப்யூட்டர் சர்வர்கள் யூ.பி.எஸ். ஆகிய கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட இந்த ஆறும் சேர்ந்துதான் 80,000 ரூபாய்க்கு வாங்கப்பட்டிருக்கிறது. எனவே அது ஒன்றும் அதிக விலை அல்ல. கம்ப்யூட்டர் மாத்திரம் வாங்கியிருந்தால், கணினி மாத்திரம் வாங்கியிருந்தால்தான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன அந்தத் தொகைக்கு வாங்கியிருக்க முடியும். இவைகளோடு சேர்ந்து பிரிண்டர், மோடம் நெட்ஒர்க் தொடர்பு பெரிய கம்ப்யூட்டர் சர்வர்கள், யூ.பி.எஸ். ஆகியவற்றையும் வாங்கியிருக்கின்ற காரணத்தால் இந்தத் தொகை அளிக்க வேண்டியதாயிற்று என்ற என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.

காவல்துறைக்கு அரசின் சார்பில் அளிக்கப்பட்டு வருகின்ற மொத்த நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்று பார்த்தால்

1995-96 வரவு செலவுத் திட்டத்தில் காவல்துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு 450 கோடியே 57 இலட்சம் ரூபாய்.

1996-97-இல் அது 497 கோடியாக உயர்ந்தது. இந்த 2000-2001 வரவு செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 1,114 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கிறது.

அதாவது 4 ஆண்டுகளில் காவல் துறைக்கு அதிகமாக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 663 கோடி ரூபாயாகும்.

அருமை நண்பர் பழனிசாமி அவர்களும் மற்றும் பல உறுப்பினர்களும் ஆளுங்கட்சி சார்பிலே பேசியவர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்களும், காவல்துறையினுடைய தவறான போக்குகள், தவறான காரியங்கள் இவைகளை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நம்முடைய நண்பர் பழனிசாமி அவர்கள் காவல்துறையினுடைய சிறந்த செயல்களுக்கான பாராட்டுக்களையும் இங்கே தெரிவித்திருக்கிறார். ஆகவே இந்தத் துறை முழுவதும் கண்டிக்கத்தக்க ஒன்று அல்ல என்பதும் இதிலே ஒரு சிலருடைய செயல்பாடுகள் கண்டிக்கத்தக்க அளவிற்கு இருக்கிறது என்பதும் புலனாகின்ற உண்மையாகும். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விடுதலைப் புலிகளைப் பற்றியும் மத நல்லிணக்கத்தைப் பற்றியும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். பிறகு நான் என்னுடைய பேச்சின் இடையிலே மறந்துவிடக்கூடும்.

அமீர் அவர்களுடைய பெயரால் மத நல்லிணக்கப் பதக்கம் ஒன்று வழங்க வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டினார்கள். நிச்சயமாக அந்தத் திருமகனுடைய பெயரால் அந்தப் பதக்கம் வழங்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். அவர் குறிப்பிட்ட

விடுதலைப் புலிகள் பற்றிய பிரச்சினைகளை எல்லாம் என்னுடைய பேச்சின் இடையிலே குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன்.

கழக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சரியாக செயல்படுகிறது. சாதி, மதக் கலவரங்கள் குறைந்திருக்கிறது என்பதை இங்குள்ள உறுப்பினர்கள் மாத்திரம் அல்ல, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் நல்லக்கண்ணு அவர்கள் கூட ஆனந்தவிகடன் ஏட்டிற்கு அளித்த பேட்டியில், சாதி, மதத் தகராறுகளை இன்றைக்கு இந்த ஆட்சியிலே குறைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, அவருடைய கருத்துக்கள் சிலவற்றையும் இணைத்திருந்தாலும் கூட பொதுவாக ஒரு பாராட்டுதலை குறிப்பிட்டிருக்கிறார். அதற்காக நான் இங்கிருந்தவாறே அவருக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கு

சாதி, மதக்கலவரங்கள் 1996-ஆம் ஆண்டு தமிழகத்திலே 29 என்ற எண்ணிக்கை அளவிலேயிருந்து, 1997-ஆம் ஆண்டு 67 என்கின்ற எண்ணிக்கை அளவிற்கு உயர்ந்து, நாம் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை எல்லாம் கூட்டி, அதற்கு என்ன நிவாரணம் தேடலாம் என்றெல்லாம் யோசித்து, இரண்டு மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து, பல நடவடிக்கைகள் எடுத்த பிறகு, 1998-ஆம் ஆண்டு 12 ஆகக் குறைந்து 1999-ஆம் ஆண்டு 6 என்ற அளவிலே குறைந்து, இன்றைக்கு ஒரேயொரு கலவரம்தான் சிறிய அளவில் திருவண்ணாமலையிலே ஒரு பள்ளிக் கூடத்திலே மாணவர்களிடத்திலே, ஈவ்-டீசிங் சம்பந்தமான பிரச்சினையிலே ஏற்பட்டது.

முஸ்லிம் மாணவருக்கும், முஸ்லிம் அல்லாத மாணவருக்கும் தகராறு ஏற்பட்டதால் ஒன்று என்று அளவிற்குக் குறைந்திருக்கின்றது.

இதிலே நாம் மகிழ்ச்சியடைந்துவிட முடியாது. இந்த ஒன்றும் இல்லாத அளவிற்கு சாதி, மதக்கலவரங்கள் ஒன்றுமே இல்லாத அளவிற்கு நாம் பாடுபட்டாக வேண்டும்.

மேலும் ஒன்றோ, இரண்டோ கூடுவதற்குக்கூட இடம் தராமல் நாம் பாடுபட்டாக வேண்டும். அமைதியான முறையிலே பெரிய விழாக்கள் எல்லாம்கூட நடைபெற்றிருக்கின்றன.

தேவர் ஜெயந்தி விழா, விநாயகர் சதுர்த்தி விழா

காவல்துறையினுடைய கடமையுணர்வின் காரணமாக, கட்டுப்பாடு காரணமாக கடந்த நான்காண்டுகளில், தேவர் ஜெயந்தி விழா மற்றும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் போன்றவை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இல்லாமல் நடந்தேறியதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல்கள்

இந்த நான்காண்டு காலத்திலே நடைபெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் தமிழக சட்டமன்ற இடைத்தேர்தல்கள் ஆகியவை மிகவும் அமைதியான முறையில் நடந்துள்ளன என்பதையும் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

குற்ற நிகழ்வுகள்

தமிழ்நாட்டில் குற்ற நிகழ்வுகளுடைய விகிதாச்சாரத்தைப் பற்றி நானல்ல, புதுடில்லியிலுள்ள மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய குற்றப் பதிவு பிரிவு (National Crime Records Bureau) 1999-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் முடிய 6 மாதங்களில் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

"Mid Term Review, 1999" என்ற அந்த அறிக்கையிலுள்ள சில புள்ளி விவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கொலை

உத்திரப் பிரதேசத்தில்	4,668
பீஹாரில்	2,716
மத்தியப் பிரதேசத்தில்	1,647
மராட்டியத்தில்	1,513
ஆந்திரப் பிரதேசத்தில்	1,367
தமிழ்நாட்டில்	907

இந்த907 என்பது மிகக் குறைவு என்று நான் கூறமாட்டேன். இந்த 907 கூட நடைபெறாவண்ணம் காவல்துறை இன்னும் கடமையாற்றிட வேண்டும் என்பதுதான் உறுப்பினர்களுடைய கருத்து என்பதை நான் மிகத் தெளிவாக உணர்வேன்.

கற்பழிப்பு

மத்திய பிரதேசத்தில்	1,868
உத்திரப் பிரதேசத்தில்	825
மராட்டியத்தில்	648
ராஜஸ்தானில்	609
பீஹாரில்	596

ஆந்திரப் பிரதேசத்தில்	485
மேற்கு வங்காளத்தில்	412
அஸ்ஸாமில்	327
கேரளாவில்	214
தமிழ்நாட்டில்	202

கூட்டுக்கொள்ளைகள் (DACOITY)

பீஹாரில்	1,190
உத்திரப் பிரதேசத்தில்	509
அஸ்ஸாமில்	448
மராட்டியத்தில்	269
மேற்கு வங்காளத்தில்	202
கர்நாடகாவில்	151
குஜராத்தில்	147
ஆந்திரப்பிரதேசத்தில்	123
தமிழ்நாட்டில்	87

வழிப்பறி (ROBBERY)

உத்திரப் பிரதேசத்தில்	2,295
பீஹாரில்	1,430

ஒரிசாவில்	557
கர்நாடகாவில்	551
ஆந்திரப் பிரதேசத்தில்	403
தமிழ்நாட்டில்	297

கன்னக்களவு (BURGLARY)

மத்தியப் பிரதேசத்தில்	8,962
மஹாராஷ்டிராவில்	7,339
உத்திரப் பிரதேசத்தில்	4,739
கர்நாடகாவில்	3,940
ஆந்திரப் பிரதேசத்தில்	3,396
தமிழ்நாட்டில்	2,745

கலவரங்கள் (RIOTS)

ராஜஸ்தானில்	7,861
பீஹாரில்	5,540
கர்நாடகத்தில்	3,722
உத்திரப் பிரதேசத்தில்	3,494
கேரளாவில்	3,199

மேற்கு வங்காளத்தில்	2,258
தமிழ்நாட்டில்	1,939

– என்ற அளவில் இந்த குற்ற நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

தமிழகக் காவல் துறையின் சிறப்பான பணி

காவல்துறையினுடைய சிறப்பான பணி என்று எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே காவல்துறையில் காவலர்களின் எண்ணிக்கை 1 இலட்சம் மக்கள் தொகைக்கு எவ்வளவு பேர், மற்ற மாநிலங்களில் எவ்வளவு பேர் என்ற கணக்கை பார்க்க வேண்டும்.

ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு காவலர்கள்

பஞ்சாபில்	297 காவலர்கள்
அஸ்ஸாமில்	193 காவலர்கள்
ஹரியானாவில்	162 காவலர்கள்
மராட்டியத்தில்	155 காவலர்கள்
குஜராத்தில்	138 காவலர்கள்

– என்ற விகிதத்தில் காவலர்கள் உள்ளனர்.

தமிழ்நாட்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 124 காவலர்கள் என்ற விகிதத்தில் தான் குறைவான எண்ணிக்கையில் உள்ளது.

ஆனால், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் காவலர்கள் எண்ணிக்கைக் குறைவாக இருப்பினும், தமிழகக் காவல்

துறையின் செயல்பாடுகள் மற்ற மாநிலங்களை மிஞ்சக்கூடிய அளவில் இருக்கிறது.

பதிவு செய்த வழக்குகளில் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் சதவீதம் என்று பார்த்தால்,

1997-இல்

அகில இந்திய சராசரி 77%

தமிழ்நாட்டில் 91%

1998-இல்

அகில இந்திய சராசரி 77%

தமிழ்நாட்டில் 90%

அதே போல, தொடரப்பட்ட வழக்குகளில் தண்டனையில் முடிவுற்ற வழக்குகளின் சதவீதம்

1997-இல்

அகில இந்திய சராசரி 38%

தமிழ்நாட்டில் 64%

1998-இல்

அகில இந்திய சராசரி 37%

தமிழ்நாட்டில் 64%

அதிலும் நாம் சிறப்பான பணியாற்றினோம் என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் நமக்குக் காட்டுகின்றன.

காவல்துறையில் மதம், சாதி இவைகளெல்லாம் தலைகாட்டக் கூடாது என்ற ஒரு நல்ல தத்துவத்தை அருமை நண்பர் அப்துல் லத்தீப் இங்கே எடுத்துக்கூறி, காவல்துறையிலே இஸ்லாமியர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றார். இரகசியத் துறை போன்ற துறைகளிலிருந்து இஸ்லாமியர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் கூறினார். கடந்த ஆண்டு காவல்துறையிலே பேசும்போதும் இதே குற்றச்சாட்டினைக் கூறினார். இந்த ஆண்டும் அதையேதான் கூறியிருக்கின்றார்.

1989–ஆம் ஆண்டு நான் ஆட்சியிலே இருந்த போது தான் ஜாபர் அலி அவர்களுக்கு புலனாய்வுத்துறை பொறுப்பினையே அளித்திருந்தேன். ஜாபர் அலி என்றாலே, அவர் இஸ்லாமியர் என்று நமக்குத் தெரியும். ஜாபர் அலி செட்டியார் என்றோ, முதலியார் என்றோ யாரும் சொல்ல முடியாது. அவரைத்தான் புலனாய்வு காவல்துறை பொறுப்பிலே மாநில அளவிலே நியமித்திருந்தேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றப்பட்ட பிறகு வந்த ஆட்சியினர் அவரை என்ன பாடுபடுத்தினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆனால், அந்த வேதனையைத் தாங்க மாட்டாமல் அவர் தானாக ஓய்வு பெற்று விட்டார்.

புலனாய்வுத் துறையில் தலைமைப் பொறுப்பில் ஜாபர் அலி அவர்களை நான் நியமித்ததற்கு முன்பு இஸ்லாமியர் யாருமே அந்தப் பொறுப்பில் இருந்ததில்லை என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போதுகூட எனக்கு முதன்மைப் பாதுகாவலராக இருப்பவர் ஜாபர்சேட், I.P.S. அவர்கள் தான் என்பதை நான் லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையிலே ஒட்டுமொத்தமாக இஸ்லாமியர்கள் என்று பார்த்தால்,

எஸ்.பி. நிலை அதிகாரிகள் 5 பேர், கூடுதல் எஸ்.பி.க்கள் கடந்த ஆண்டு 3 பேர், இந்த ஆண்டு 6 பேர், டி.எஸ்.பி.க்கள் கடந்த ஆண்டு 16 பேர், இந்த ஆண்டு 17 பேர், இன்ஸ்பெக்டர்கள் கடந்த ஆண்டு வரை 132 பேர், இந்த ஆண்டு 137 பேர், சப்–இன்ஸ்பெக்டர்கள் கடந்த ஆண்டு வரையில் 231 பேர் இந்த ஆண்டு 271 பேர், தலைமைக் காவலர் மற்றும் காவலர்கள் கடந்த ஆண்டு வரையில் 4,617 பேர், இந்த ஆண்டு 4,648 பேர்.

ஒட்டு மொத்தமாக கடந்த ஆண்டு 4,604 பேர் இஸ்லாமியர்கள் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டு 5,084 பேர் காவல்துறையிலே பணியாற்றுகிறார்கள்.

காவல்துறையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையிலே இது 6.3 விழுக்காடு. [கடந்த ஆண்டு 5.49] ஒரு விழுக்காடு உண்டா என்று அன்றைக்கு லத்தீப் ஆணித்தரமாகக் கேட்டார். ஆனால் மொத்தப் பணியாளர்களில் 6.3 விழுக்காடு அளவிற்கு இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால் அரசின் முக்கிய துறையான பொதுத் துறையின் செயலாளராக இருப்பவரே பரூக்கி என்ற இஸ்லாமிய ஐ.ஏ.எஸ். அதிகாரிதான். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் மூன்று பேர் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இரகசியத் துறையிலே இஸ்லாமியர் இல்லை என்றும் இருந்தவர்களும் நீக்கப்பட்டு விட்டார்கள் என்றும் அப்துல் லத்தீப் கூறினார்.

குற்றப்புலனாய்வுத் துறை, ஒற்றாய்வுத் துறை, க்யூ பிரிவு ஆகியவற்றில் இஸ்லாமியர்கள் எஸ்.பி. நிலையில் ஒருவரும், டி.எஸ்.பி. நிலையில் ஒருவரும், 6 இன்ஸ்பெக்டர்களும், 7 சப்-இன்ஸ்பெக்டர்களும், 30 தலைமைக்காவலர் மற்றும் காவலர்களும் ஆக மொத்தம் 45 பேர் பணியாற்றுகிறார்கள். அண்மைக் காலத்தில் க்யூ பிரிவிலிருந்து ஒரேயொரு இன்ஸ்பெக்டரும் ஒரு தலைமைக் காவலரும்தான் மாற்றப்பட்டுள்ளார்கள். மற்றவர்கள் யாரும் மாற்றப்படவில்லை.

மேலும் லத்தீப் ஆயிரக்கணக்கான இஸ்லாமிய அப்பாவி இளைஞர்கள் - நிரபராதிகள் சிறையில் இருப்பதாகச் சொன்னார். நான் அதைப்பற்றி வலியுறுத்திக் கேட்டபோது இதெல்லாம் ஒரு உயர்வு நவிற்சி என்று சொன்னார். உயர்வு நவிற்சி என்பது இல்லாத பெருமையை அதிகமாகச் சொல்வது. இல்லாத எண்ணிக்கையை அதிகமாகச் சொல்வது, மிகைப்படுத்துதல். அவர் பன்மொழிப் புலவர். அவருக்கு நான் தமிழ் கற்றுகொடுக்க வேண்டிய அவசியமில்லை. மிகைப்படுத்தி அன்றைக்கு ஆயிரக்கணக்கான இஸ்லாமிய அப்பாவி இளைஞர்கள் சிறையிலிருப்பதாகச் சொன்னார். மேலும் அந்த எண்ணிக்கையை நீங்கள்தான் கொண்டு வர வேண்டும் என்று நான் திருப்பிக் கேட்டபோது எனக்குச் சொன்னார். கட்டளையை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறேன்.

தமிழகத்திலே உள்ள பத்து சிறைச்சாலைகளிலும் சேர்த்து 12.5.2000 அன்று மொத்தம் சிறையிலே இருப்பவர்கள் 13,138 பேர். இதில் இஸ்லாமியர்கள் 351 பேர், இஸ்லாமியர் அல்லாதவர் 12,787 பேர். சதவீதக் கணக்கில் பார்த்தால் இஸ்லாமியர்கள் 2.67 சதவிகிதம். இஸ்லாமியர்கள் அல்லாதவர்கள் 97.33 சதவிகிதம் என்ற இந்த விவரத்தை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

விரைவான புலன் விசாரணை

விரைவான புலன் விசாரணை நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டு அன்று பேசிய எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரால் எடுத்து வைக்கப்பட்டது. சுந்தரம் அவர்களும் அதே கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார். காவல் துறை நத்தை வேகத்தில் நடைபெறுவதாகக் கூறினார். எந்த அளவுக்கு தீவிரமாக, விரைவாக புலன் விசாரணை நடைபெற்று குற்றப்பத்திரிகைகளெல்லாம் கொடுக்கப்பட்டு விசாரணையும் முடிவுற்று தண்டனைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு சில விவரங்களை இந்த அவைக்கு தெரிவிப்பது என்னுடைய தலையாய கடமையாகும்.

கோயமுத்தூர் குண்டு வெடிப்பு

கோயமுத்தூரில் நடந்த வெடிகுண்டு சம்பவங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்புப் புலனாய்வுக் குழு தீவிரமாக விசாரணை செய்து 175 குற்றவாளிகளைக் கைது செய்தது. கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் விசாரணை முடிக்கப்பட்டு 5.5.1999 அன்று 180 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டது.

இரயில் குண்டு வெடிப்புகள்

சென்னையிலிருந்து திருச்சி, ஈரோடு, திருச்சூர் சென்ற ரெயில்களில் 6.12.1997 அன்று குண்டு வெடித்து, 10 பேர் இறந்த சம்பவத்தைப் புலனாய்வு செய்த சிறப்பு புலனாய்வுக் குழு குற்றவாளிகள் ஒன்பது பேரை விரைந்து கைது செய்தது.

சென்னை, கோயமுத்தூர் மற்றும் திருச்சி ஆகிய நகரங்களில் 30.5.1999 அன்று குண்டு வைத்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டார்கள்.

சென்னை இந்து முன்னணி அலுவலகத்தை வெடி வைத்து தகர்த்த வழக்கு, திரைப்பட இயக்குநர் மணிரத்தினம் வீட்டின் மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, சென்னையில் மூன்று ஓட்டல்களில் குண்டு வெடிக்கப்பட்ட வழக்கு போன்றவை முந்தைய ஆட்சிக் காலத்தின் போது நிகழ்ந்து, நீண்ட காலமாக நிலுவையிலிருந்தன. இந்த வழக்குகள் கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் விரைந்து புலன் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

தருமபுரியில் கோவை விவசாயக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்து ஒன்று எரிக்கப்பட்டு, அதிலிருந்த 3 விவசாயக் கல்லூரி மாணவிகள் எரித்துக் கொல்லப்பட்டனர். நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்த இந்த வன்முறை கொலைச் சம்பவம் குறித்த வழக்கில் குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்பு புலனாய்வுக் குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 28.4.2000 அன்று குற்றம் நடைபெற்ற மூன்று மாதத்திற்குள் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட 3 முக்கிய குற்றவாளிகள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டனர்.

முக்கிய வழக்குகள்

முக்கிய வழக்குகள் என்று எடுத்துக் கொண்டால் பரபரப்பான வழக்குகள் பல விரைந்து முடிவு செய்யப்பட்டிருக்கின்றன.

★ போலிச்சாமியார் பிரேமானந்தா வழக்கில், பிரேமானந்தாவுக்கு 30 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமாக 66 இலட்சத்து 40 ஆயிரமும் விதிக்கப்பட்டது. இதர நான்கு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மற்றும் பெண் குற்றவாளியான டாக்டர் சந்திராதேவிக்கு 2 ஆண்டு 7 மாதம் 2 நாள் சிறை தண்டனையும், அபராதமாக ரூபாய் 25 ஆயிரமும் விதிக்கப்பட்டது.

★ சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரி முதலாமாண்டு மாணவர் பொன். நாவரசு கொலை வழக்கில் ரேக்கிங் [கேலிவதை] காரணமாக அக்கொலையைச் செய்த ஜான்டேவிட் என்ற குற்றவாளிக்கு ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

★ பொள்ளாச்சியில் ஜிகாத் கமிட்டித் தலைவர் பழனிபாபா கொலை செய்யப்பட்ட வழக்கில் 10.11.1999 அன்று ஐந்து குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையும் மேலும் 5 வருட கடுங்காவல் தண்டனையும் அளிக்கப்பட்டது.

★ சிதம்பரம் ம.தி.மு.க. பிரமுகர் பழனிவேலு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட 19 குற்றவாளிகள், கைதாகாமல் இருக்க எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளையும் முறியடித்து காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

★ தேவக்கோட்டை தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் ரூசோ கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காளிமுத்து, சொர்ணலிங்கம் மற்றும் 11 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

★ மதுரை கல்லூரி பேராசிரியர் பரமசிவம் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட இப்ராஹிம், நூர்தின், சாகுல் அமீது, இப்ராஹிம் ஷா மற்றும் பழனி ஆகிய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதும், நீதிமன்றத்தில் சரண் அடைந்த பக்ருதின் என்பவர் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன் இவர்களில் 4 குற்றவாளிகளின் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

★ மதுரையில் உதவி ஜெயிலர் ஜெயப்பிரகாஷ் கொலை செய்யப்பட்ட வழக்கில் அபுதாகிர், ஆசிக், அஸ்லாம் மற்றும் ஜாப்ரு என்ற சையது ஜபார் அகமது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

★ திண்டுக்கல் மாவட்டம், களத்தூரைச் சேர்ந்த மந்திரவாதி வேலுசாமி தனது தாய், மாமனார் மற்றும் தனது உதவியாளர் ஆகிய மூன்று பேரைக் கொன்ற வழக்கில், புலன் விசாரணை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டுள்ளது. வேலுச்சாமி உள்ளிட்ட மூவர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். 25.2.2000 அன்று குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

★ நாகர்கோவிலைச் சேர்ந்த செல்வி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் சிவகுமார், வாத்தியார் முருகன் என்கிற தியாகராஜன் மற்றும் நாகராஜன் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் விரைவில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும்.

★ தருமபுரி மாவட்டத்தில் மூன்று வனப்பாதுகாவலர்கள் எரித்துக் கொல்லப்பட்ட வழக்கில், மூன்று வனப்பாதுகாவலர்களும், பசவன் என்பவனின் கும்பலினால், கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் எரிக்கப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. அனைத்து குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். வழக்கு நடைபெற்று வருகிறது.

★ மார்த்தாண்டத்தில் ஆசிரமம் நடத்தி வந்த ஜான்ஜோசப் என்ற போலிச்சாமியார் மீது, கற்பழிப்பு, பயமுறுத்தல், கொலை ஆகிய குற்றச்செயல்கள் புரிந்ததாக புகார்கள் வந்தன. தீவிர புலன் விசாரணைக்குப் பிறகு போலிச்சாமியாரும் மேலும் 4 பேரும் கைது செய்யப்பட்டனர்.

★ தூத்துக்குடி காயல்பட்டிணம் பேட்மா நகரில் மஜீத் என்பவர் நரபலி தரப்பட்ட வழக்கில் இரண்டு எதிரிகளும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

★ ஈவ் டீசிங் காரணமாக பலத்த காயமடைந்து சரிகா ஷா என்ற கல்லூரி மாணவி இறந்துவிட்டார். இதற்குக் காரணமான குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். குற்றப்பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

★ திருச்சியில் டாக்டர் ஸ்ரீதர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட 13 குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

★ இராமநாதபுரம் மாவட்ட ஆர்.எஸ்.எஸ். அமைப்பாளர் குப்புராம் தாக்கப்பட்ட வழக்கில், இரு குற்றவாளிகளையும் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். குற்றப்பத்திரிக்கைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

★ திருச்சியில் லீலாவதி என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் கொலைக்கு காரணமான ஸ்ரீபுத்ரா, தினகரன், ஸ்ரீஜெயந்தி மாதாஜி, பெரிய சத்தியநாராயணன், சின்னசத்தியநாராயணன் மற்றும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.

★ சென்னையில் கிறித்துவக் கல்லூரியில் விண்ணப்பம் வாங்கச் சென்ற ராஜேஸ்வரி என்ற இளம் பெண் கல்லூரி வளாகத்தில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். காவல்துறையின் தீவிரமான புலன் விசாரணையின் மூலம் குற்றவாளிகள் கண்டு

பிடிக்கப்பட்டுள்ளனர். 4 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

★ சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது போன்று போலியான ஜாமீன் உத்திரவுகளை தயார்செய்து அவைகளைப் பயன்படுத்தி நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களைச் சேர்ந்த 48 கைதிகள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கில் குற்றவாளிகளான தூத்துக்குடியைச் சேர்ந்த குருமூர்த்தி, உடன்குடியைச் சேர்ந்த பொன் ஆதித்தன், சேரன்மாதேவியை சேர்ந்த பாவநாசம் மற்றும் நாகர்கோயிலைச் சேர்ந்த பொன்ராஜ் ஆகியோரை ஆதாரங்களுடன் கைது செய்து, போலியான ஜாமீன் உத்திரவுகள் தயார் செய்வது ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

★ பெரம்பலூர் மாவட்டத்தில் 1999–ஆம் ஆண்டில், 6 மாத காலத்தில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் ஒதுக்குப்புறமாக இருந்த வீடுகளில் வசித்த பெண்கள் 21 பெண்கள் ஒரே முறையில் கொலை செய்யப்பட்டனர். போலீசாரின் தீவிரமான புலன் விசாரணைக்குப் பிறகு அக்கொலைகளைச் செய்த மருதமுத்து என்பவர் கைது செய்யப்பட்டு, குண்டர்கள் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

★ கன்னியாகுமரி, தெரிசனம்கொப்பு என்ற இடத்தில் ஒரு தனியார் வங்கியின் [GSC] பாதுகாப்புப் பெட்டகம் உடைக்கப்பட்டு ரூபாய் 60 இலட்சம் மதிப்பு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த வழக்கில் அனைத்து குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். கொள்ளையடிக்கப்பட்ட அனைத்து நகைகளும் திரும்பக் கைப்பற்றப்பட்டன.

★ மதுரை மாநகராட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி கொலை வழக்கில் ஆளுங்கட்சிக்காரர்கள் மீதே

குற்றஞ்சாட்டப்பட்டது, என்றாலும் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர். அதுமாத்திரமல்ல. வழக்கு முடியும் வரை அவர்கள் ஜாமீனில் கூட விடாமல் குற்றவாளிகள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

★ கோவையில் பச்சிலை ராமன் என்பவர் ஐக்கம்மா பூஜை என்ற பெயரில் சுமார் 20 அப்பாவிப் பெண்களைக் கடத்திச் சென்று உடலுறவு வைத்து பின்னர் திருப்பி அனுப்பியிருக்கிறார். 8.2.2000 அன்று இவர் கைது செய்யப்பட்டு ஓராண்டு தடுப்புக் காவல் சட்டத்தில் வைக்கப்பட்டுள்ளார்.

★ சேலம் மாவட்டத்தில் சுப்பிரமணி என்பவர் சாமியாடி வாக்கு சொல்லுவதாக கூறி பல நாட்களாக ஏமாற்றி வந்திருக்கிறார். இறுதியாக வள்ளிஅம்மாள் என்பவரை கற்பழித்தாக புகார் வந்ததையொட்டி வழக்கு பதிவு செய்யப்பட்டு இவரும் கைது செய்யப்பட்டார்.

★ இவ்வளவு என்ன, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் அவர்களுடைய மகனுடைய இல்லத்திலே கூட 12-ஆம் தேதி திருட்டு. 13-ஆம் தேதி கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

சோ. பாலகிருஷ்ணன் : என்னுடைய மகன் வீட்டில் திருடியதை 24 மணி நேரத்தில் பிடித்துவிட்டார்கள். அதனால் எனக்கு என்ன தொல்லை என்றால், அந்தத் திருடு போனவைகள் எல்லாம் நீங்கள் வந்து எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதால் வந்து விட்டது. எங்களுக்கும் வாங்கிக் கொடுங்கள் என்று ஏகப்பட்ட போன் வருகிறது.

முதல்வர் கலைஞர் : எப்படியோ செய்தி விளம்பரமானால் சரி. அதேபோல, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், பலமாடி

குடியிருப்புகளில் திருடுவதில் கைதேர்ந்த கவுஸ்பாஷா, அவருடைய மகன் அக்பர்பாஷா மற்றும் மருமகன் நாசர் ஆகியோர் சென்னை நகர காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டனர். 18 வழக்குகளில் தொடர்புள்ள இவர்களிடம் இருந்து 5.2 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

★ தாம்பரத்தை அடுத்த பொழிச்சலூரைச் சார்ந்த, 1990 முதல் திருட்டு குற்றங்களில் ஈடுபட்டு வந்து 105 வழக்குகளில் குற்றவாளியான இரத்தினபாண்டியன் என்பவர் 13.9.99 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 87 தொலைகாட்சி பெட்டிகள், 131 சவரன் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. 4.11.99 அன்று இவர் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டார்.

★ தென் சென்னை பகுதிகளில் திருட்டுகள் புரிந்து வந்த கல்கத்தாவை சேர்ந்த, கொடூரமான குற்றவாளி பர்வீஸ் அலி என்பவர் 2.7.99 அன்று கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ரூ.3 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மீட்கப்பட்டன. இக்குற்றவாளி குண்டர்கள் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்.

★ சென்னை பூக்கடை பகுதிகளில் உள்ள வியாபாரிகளிடம் இருந்து பெரிய அளவில் பணத்தை கொள்ளை அடித்து, 10கிலோ எடையுள்ள தங்க நகைகள் மற்றும் சுமார் 25 இலட்சம் மதிப்புள்ள பணத்தை கொள்ளையடித்த குற்றவாளிகளான மன்னீர் பேட்டையைச் சார்ந்த அனில் குமார் மற்றும் அவரது கூட்டாளிகள் 20.7.99 அன்று கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

★ பல்வேறு கொள்ளைகள் மற்றும் பணத்திற்காக ஆட்களை கடத்துதல் போன்ற குற்றங்களைச் செய்து வந்த முகேஷ் மற்றும்

அவனது கூட்டாளிகள் அனைவரும் 29.12.99 அன்று கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து மூன்று கைத்துப்பாக்கிகள், 37 குண்டுகள், அம்பாசிடர் கார், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ரூபாய் 4 இலட்சம் கைப்பற்றப்பட்டன.

★ வருமான வரி அதிகாரிகளைப் போலவும், சுங்க இலாகா அதிகாரிகளைப் போலவும் மேலும் போலீஸ் சி.ஐ.டி. அதிகாரிகள் போலவும் போலியான வேஷத்தோடு மக்களை ஏமாற்றியும் மிரட்டியும் கொள்ளைகள் நடத்திய சதீஷ் மற்றும் அவனது கூட்டாளிகள் கைது செய்யப்பட்டனர். 11.3.99 அன்று குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப் பட்டிருக்கின்றார்கள்.

ரவுடிகள் சாம்ராஜ்யம் தகர்ப்பு

இப்படி ஏமாற்றி கொள்ளை அடித்தல், வஞ்சித்து திருடுதல் போன்ற காரியங்களுக்கு மாத்திரமல்ல, ரவுடிகள் ராஜ்யத்தைக் கூட இந்த 4 ஆண்டு காலத்திலே நம்முடைய காவல் துறையினர் பெருமளவுக்கு கட்டுப்படுத்தி தகர்த்தெறிந்திருக்கிறார்கள்.

★ சென்னையில் மோகன் என்ற கபிலன், ஆசைத்தம்பி, மனோ, கோபால் ஆகிய ரவுடிகள்

★ திருநெல்வேலியில் முத்துராஜ் என்ற ரவுடி

★ கன்னியாகுமரியில் நாவல்காடு ஆர்னால்டு என்ற ரவுடி

★ தஞ்சாவூரில் கண்ணன் என்ற ரவுடி

★ தூத்துக்குடியில் பால் என்ற ரவுடி

★ திருச்சியில் சில நாட்களுக்கு முன்பு பிச்சைமுத்து என்ற ரவுடி, சில மாதங்களுக்கு முன்பு கோசிஜின் என்ற ரவுடி ஆகிய பிரபல ரவுடிகள் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

★ பல்வேறு கொலைகள், கொள்ளைகள் மற்றும் வழிப்பறிகள் புரிந்து நீண்ட நாட்களாக தலைமறைவாய் இருந்து வந்த கொடூரமான ரவுடி ரவி என்கிற வெள்ளை ரவி கைது செய்யப்பட்டு 12.5.99 அன்று குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

★ பல்வேறு கொலை குற்றங்கள், கொள்ளைகள், பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல், கட்டப்பஞ்சாயத்து செய்து குடியிருப் பவர்களை மிரட்டி வீட்டைக் காலி செய்யவைப்பது போன்ற கொடுங்குற்றங்களைச் செய்து வந்த சைதாப்பேட்டையை சேர்ந்த பிரபல ரவுடியான குமார் என்ற பங்க் குமார் கைது செய்யப்பட்டு 7.4.99 அன்று குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

★ இன்னொரு ரவுடி சேராவும் கைது செய்யப்பட்டார்.

★ ஏற்கெனவே 17 முறை சிறைத்தண்டனை அனுபவித்து 32 கொள்ளை, கொலை மற்றும் வன்முறை போன்ற குற்றங்களில் சம்பந்தப்பட்ட சென்னை சேத்துப்பட்டைச் சேர்ந்த தங்கையன் என்பவரும் அவனது 8 கூட்டாளிகளும் 14.12.99 அன்று கைது செய்யப்பட்டனர். குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

★ சென்னை வால்டாக்ஸ் சாலையை சார்ந்த தங்கவேல் மற்றும் அவரது சகோதரர்கள், உறவினர் ஆகியோர் 7.2.99 அன்று கோபி என்பவரைக் கொலை செய்தனர். அவர்கள் கைது செய்யப்பட்டு 22.2.99 அன்று குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

★ பல்வேறு கொள்ளைகள் பணத்திற்காக ஆட்களைக் கடத்துதல் மற்றும் வியாபாரிகளை மிரட்டி பணம் வசூலித்தல் போன்ற

குற்றங்களை செய்து வந்த சுப்பிரமணி என்ற குற்றவாளி 27.6.99 அன்று குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டார்.

★ கட்டப்பஞ்சாயத்து செய்தல், ஆட்களைக் கடத்துதல் மற்றும் ஆட்களை மிரட்டி குடும்பத்தினரை வீடு காலி பண்ணச் செய்து வந்த இராஜா என்பவனும் அவனது கூட்டாளிகள் 12 பேர்களும் 10.4.99 அன்று கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டனர்.

★ கன்னியாகுமரி மாவட்டம் ரவுடி கும்பலைச் சேர்ந்த லிங்கம், பாபுசுரேஷ் ஆகியோரைக் கொலை செய்த ரவுடி சீலன் கும்பலைச் சேர்ந்த 24 பேர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்கள்.

★ பல குண்டு வெடிப்பு சம்பவங்களில் சம்பந்தப்பட்ட ஏர்வாடி காசிம் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார்.

★ ரவுடிகள் மீண்டும் தொடர்ந்து தலையெடுக்காமல் இருக்கத் தேவையான கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. இதற்கு பொது மக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருட்டு வீடியோ திரைப்படம் எடுப்பவர்களை பெரும் நட்டத்திற்கு ஆளாக்கும் வகையில் நடைபெறுகின்ற ஒரு காரியம். திருட்டு வீடியோ என்பது ஒரு படம் தயாரிக்கப்பட்டு அது வெளியிடப்பட்ட நாளன்றோ அல்லது வெளியிடப்படுவதற்கு முதல் நாளோ இந்தத் திருட்டு வீடியோக்கள் நாட்டிலே பரவி படத்தினுடைய வசூலை கெடுப்பதாக படத் தயாரிப்பாளர்கள், திரைப்படக் கலைஞர்கள் பலமுறை என்னிடத்திலே முறையிட்டிருக்கின்றார்கள்.

அதுபற்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நானளித்த உறுதியின் காரணமாக 2000 ஆண்டு ஜனவரி முதல் இதுவரை திருட்டு வீடியோ தொடர்பாக,

99 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன,

108 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

2 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டில் திருட்டு வீடியோ தடுப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு 123 வழக்குகளைப் பதிவு செய்தது.

அதில் 10 வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 68 வழக்குகள் நிலுவையிலுள்ளன.

ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

6 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள திருட்டு வீடியோக்கள் கைப்பற்றப்பட்டன.

சென்னை மாநகரில் கடந்த ஆண்டு மட்டும் திருட்டு வீடியோ தொடர்பாக,

மொத்தம் 80 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 7 பேர் குண்டர்கள் சட்டத்தின்படி வழக்கு போடப்பட்டு மூன்று மாதங்கள் சிறையிலே இருந்த பிறகுதான் உயர்நீதிமன்றத்தின் ஆய்வுக்குழு ஆணைப்படி சிறையிலிருந்து வெளிவந்துள்ளனர்.

மேலும் 36 பேர் மீது வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வருகிறது.

5,840 வி.சி.டிக்களும், 14,205 வீடியோ சேகட்டுகளும் கைப்பற்றப்பட்டன.

இந்த ஆண்டில் மாத்திரம் சென்னை மாநகரில் 24 வழக்குகள் போடப்பட்டு 26 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 5,455 வி.சி.டி.க்களும் 115 வீடியோ கேசட்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. 12-5-2000 அன்று மாலை நடைபெற்ற சோதனையிலே மட்டும் 1,180 வி.சி.டி.க்கள் கைப்பற்றப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நகரில் உள்ள சில வீடியோ கடைகளில் திடீர் சோதனை செய்ததில் 79 வி.சி.டி.க்கள் கைப்பற்றப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காவல் நிலைய மரணங்கள்

காவல் நிலைய மரணங்களைப் பற்றி ஞானசேகரன் அன்றைக்குப் பேசினார். காவல்நிலையத்துக்குச் சென்றாலே மரணம்தானா என்று ஆத்திரத்தோடு கேட்டார். காவல்நிலைய மரணங்களை இந்த அரசு வரவேற்கவில்லை. மாறாக, தன்னுடைய கவலையை அதற்காக தெரிவித்துக்கொள்கிற அரசுதான் இந்த அரசு என்பதையும், அதற்குக் காரணமாக இருக்கின்ற காவல்துறை அதிகாரிகளை கடுமையாக தண்டிக்கின்ற அரசு இந்த அரசு என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். அண்மைக்காலமாக - கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற அளவுக்கு காவல்நிலைய மரணங்கள் இப்போது நிகழவில்லை. அது உறுப்பினர்களுக்குத் தரப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும் விளக்கப்பட்டிருக்கிறது.

1996ஆம் ஆண்டு காவல்நிலையங்களில் நடந்த மரணங்கள் 13; 1997ஆம் ஆண்டு 16; 1998-ல் 8; 1999-ல் 8. இந்த மரணங்களும்

தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் முக்கியமான நோக்கம்.

இதுகுறித்து தவறு செய்த அலுவலர்கள் மீது இந்த அரசு எடுத்த நடவடிக்கை என்னவென்றால் கடந்த நான்காண்டுகளில் மட்டும் 1 இன்ஸ்பெக்டர், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், 9 காவலர்கள் காவல் நிலைய மரணங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். 4 டி.எஸ்.பி.க்கள், 16 இன்ஸ்பெக்டர்கள், 20 சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் 75 காவலர்கள் மீது குற்றவியல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி நிறுவனங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஞானசேகரன் அவர்கள் பேசும்போது நிதிநிறுவனங்களுடைய மோசடிகளைக் குறித்து பேசினார்கள். இந்த நிதி நிறுவனங்களுடைய மோசடிகளைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்ததே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிலே ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சுணக்கம் இருந்திருக்கலாம் அல்லது ஒன்றிரண்டு நிகழ்வுகளில் சில அதிகாரிகளால் தவறுகள்கூட ஏற்பட்டிருக்கலாம். அவைகளையெல்லாம் நம்முடைய செல்லக்குமார் அவர்கள்கூட அன்றைக்குச் சுட்டிக் காட்டினார்கள். அவையெல்லாம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, அவை மறுபடியும் ஒழுங்குபடுத்தப்பட்டன என்பதை அறிவீர்கள். ஆனால், இந்த அரசு எடுத்த நடவடிக்கைகளினால் நிதிநிறுவனங்களுடைய மோசடிகள் மக்கள் மன்றத்திலே அம்பலமாக்கப்பட்டிருக்கிறது.

நிதிநிறுவன முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம்

அதுவும் குறிப்பாக, இந்தியாவிற்கே வழிகாட்டியாக 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிறுவன வைப்பீட்டாளர்கள் பாதுகாப்புச்

சட்டத்தை இந்த அரசுதான் முதன்முதலாக இயற்றியது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிறுவன மோசடி சம்பந்தமான வழக்குகளை விசாரிக்க சென்னையிலே தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டது. தனி நீதிமன்றம் என்றால் வேறு, அந்த நீதிமன்றம் அல்ல. இது வேறு. நிதிநிறுவனங்களுடைய மோசடிக்காக தனி நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

மோசடி நிதிநிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க பொருளாதாரக் குற்றப்பிரிவு-2 என்ற புதிய காவல்துறை பிரிவை இந்த அரசு 1999இல் ஏற்படுத்தியது.

இதுவரை பொருளாதார குற்றப்பிரிவில் மொத்தம் 235 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இவற்றில் 4 வழக்குகளில் எதிரிகள் முதலீட்டாளர் களுக்கு முதலீடு தொகை முழுவதையும் செலுத்திவிட்ட படியால் மேல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

கே. சுப்பராயன் : நிதிநிறுவனங்களிடம் கடன் பெற்றவர்களின் சொத்தை அட்டாச்மெண்ட் செய்கிற வகையில் மாநில அரசு சட்டத் திருத்தம் செய்ய ஆலோசிக்குமா?

செல்லக்குமார் : அதிகாரிகளின் உதவியால் சில குறிப்பிட்ட நிதிநிறுவனங்களின் அதிபர்கள் தப்பித்து விட்டார்கள். கடன் பெற்றவர்கள் சிலர் செல்வாக்குப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு அரசியல் தலைவர்களுடைய பின்னணியிலே இருப்பதாக சொல்லப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் சொத்துக்களை அரசு கையகப்படுத்த முன் வருமா?

முதல்வர் கலைஞர் : சுப்பராயன் அவர்கள் எழுப்பிய பிரச்சின்னக்கு இப்போது நடைபெற்று வருகிற அந்த வழக்குகளில்

சாதக பாதகமாக என்ன இருக்கிறது என்பதை எண்ணிப்பார்த்து, அவர் கூறிய அந்தக் கருத்தை இணைத்து, சட்டப்படி யோசித்து ஆவன செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்தெந்த அரசியல் இயக்கங்கள் எதெதிலே பின்னணி என்பதை அறிவேன்

செல்லக்குமார் எழுப்பியது; ஏதோ அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியிலே இருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே சொல்ல வேண்டும் என்று எண்ணிச் சொல்கின்றார். அரசியல் இயக்கங்களினுடைய பின்னணியில் இருக்கின்றன என்று சொல்கின்ற காரணத்தால், அது திராவிட முன்னேற்றக் கழகம் என்று ஆகிவிடாது. எந்த அரசியல் இயக்கமும் இருக்கலாம். எந்தெந்த அரசியல் இயக்கங்கள் எதெதிலெல்லாம் பின்னணியாக இருக்கின்றன என்பதை நான் மிக நன்றாக அறிவேன். நாடும் மிக நன்றாக அறியும். எனவே, அதைச் சொல்ல விரும்பவில்லை.

மேலும் 4 வழக்குகளில் எதிரிகள் மீது புதிதாக இயற்றப்பட்ட 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு நிறுவன வைப்பீட்டாளர்களின் பாதுகாப்பு சட்டப்படி தண்டனையில் முடிந்து, நிதி நிறுவன உரிமையாளர்களுக்கு அதிகபட்ச தண்டனையாக 10 வருட கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு ரூபாய் 1 இலட்சம் அபராதமும் மற்றும் மூவருக்கு தலா ரூபாய் 50,000 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

★ 41 வழக்குகளில் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட்டு பல்வேறு நீதிமன்றங்களில் விசாரணையில் உள்ளன. இவ்வழக்குகளில் 17 வழக்குகள் சென்னையில் தனி நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன.

★ மேற்படி 235 வழக்குகளில், 8 இலட்சத்து 24 ஆயிரத்து 724 முதலீட்டாளர்களின் 1,478 கோடி ரூபாயை பல்வேறு மோசடி நிதிநிறுவனங்கள் ஏமாற்றியுள்ளன.

★ இதுவரை மொத்தம் 1 இலட்சத்து 32 ஆயிரத்து 589 புகார்கள் பெறப்பட்டுள்ளன. 1,04,890 கோடி ரூபாய் மதிப்புள்ள நிதிநிறுவனங்களின் சொத்துக்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன. மேற்படி 235 வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ள 301 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்களைக் கைது செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ நிதி நிறுவன மோசடி வழக்குகளில் 34 நிதி நிறுவனங்களுக்குச் சொந்தமான 31,483 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களைக் காவல்துறையினரால் கண்டுபிடிக்கப் பட்டு சொத்துக்கள் முடக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ காவல்துறையின் நடவடிக்கையால் இதுவரை முதலீட்டாளர் களுக்கு 103 கோடியே 62 இலட்ச ரூபாய் பெற்றுத் தரப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதெல்லாம் மேலும் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பொதுமக்கள் இனிமேலாவது ஏமாறாமல் இருக்கவேண்டும் என்றுதான் இந்தப் புள்ளி விவரத்தின் மூலமாக நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எத்தனை செய்திகள் வந்தாலும், மறுபடியும் இன்னொரு நிதி நிறுவன மோசடி என்று வருகிறது. காரணம், பொதுமக்கள் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, அங்கே கொண்டுபோய் பணத்தைப் போடுகிறார்கள். பணத்தைப் போட்டுவிட்ட பிறகு, ஏமாந்த பிறகு, அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு; வாங்கிக்கொடு என்று பழியை நம் தலையிலே போடுகிறார்கள். பல சாமியார்களிடம் ஏமாந்தாலும்கூட, புதுப்புது சாமியார்கள் முளைத்துக்கொண்டு இருப்பதைப்போல, இந்த நிதிநிறுவனங்களில் ஏமாந்தாலும்கூட புதுப்புது நிதிநிறுவனங்கள் முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றன என்பதை நர்ன் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

ஞானசேகரன் : இந்த நிதிநிறுவன மோசடியில் எங்கள் மாவட்டத்தில் நிதியைப் பெற்றுக்கொண்டு புரோநோட் கொடுத்துள்ளார்கள். அதையும் மோசடிக் குற்றமாக சேர்த்து இந்த சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமா?

முதல்வர் கலைஞர் : அது புரோநோட்டாக இருக்கிற வரையிலும் அது புரோநோட்தான். அது மோசடி என்று கண்டுபிடிக்கிற வகையில் அது புரோநோட்டாகத்தான் இருக்கும். புரோநோட்டைப்போல் திடீரென்று மோசடி என்று சொல்லமுடியாது. அது புரோநோட் அல்ல, மோசடி என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு வேண்டுமானால் இரண்டுக்கும் சேர்த்து அவர்கள் மீது வழக்குத் தொடரலாம்.

செல்லக்குமார் இன்னொன்றையும் சொன்னார். வடபழனி காவல் நிலையம் நான் கேட்டேன்; நீங்கள் கொடுத்தீர்கள்; ஆனால், அந்தக் காவல் நிலையத் திறப்பு விழாவிற்கு எனக்கு அழைப்பு இல்லை; என்னைக் கூப்பிடவில்லை என்று சொன்னார். அதிலே பாதி உண்மை. காவல் நிலையம் கேட்டது உண்மை; நான் கொடுத்தது உண்மை. ஆனால், அதற்குத் திறப்பு விழா நடக்கவில்லை. நடந்தால்தானே கூப்பிட முடியும்? நடக்கவில்லை. எல்லாவற்றுக்கும் இப்படி எழுந்து நின்றால் எப்படி?

செல்லக்குமார் : தவறாகச் சொல்லவில்லை; பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

முதல்வர் கலைஞர் : நான் தகவலைச் சொல்வதற்கு முன்னால் எழுந்தால் எப்படி? நான் அதிகமாக இடம் கொடுத்து உட்காருகிறேன் என்பதற்காக சும்மா சும்மா எழுந்திருப்பதா? நான் கொஞ்சம் ஓய்வு எடுக்கலாம் என்பதற்காக உட்காருகிறேன்; அவ்வளவுதான்.

ஏற்கெனவே, கோடம்பாக்கத்திலே ஒரு காவல்நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்திலேயே, நான்

செல்லக்குமாருக்குக் கொடுத்த அந்த வடபழனி காவல் நிலையத்தையும் அங்கே வைத்து, இரண்டு பேரையும் வைத்து, ஒண்டிக் குடித்தனம் வைத்து கொஞ்ச நாட்கள் நடத்தினார்கள். அதற்குப் பிறகு, அந்தக் கோடம்பாக்கம் காவல்நிலையத்தை அங்கேயிருந்து அகற்றி விட்டார்கள். 'ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியைத் துரத்தியது' மாதிரி. உங்கள் பிடாரி - வடபழனி காவல்நிலையம் - அங்கே இருக்கிற கோடம்பாக்கம் காவல்நிலையத்தை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தியது. அந்தக் கோடம்பாக்கம் காவல்நிலையம் வேறு இடத்திற்குப் போனபோது, பழைய கோடம்பாக்கம் காவல் நிலையத்திற்குத் திறப்பு விழா.

திறப்பு விழா என்றால், அழைப்பிதழ் கிடையாது. யாருக்கும் அழைப்பு கிடையாது. சும்மா அதிகாரிகள் போய் குத்துவிளக்கு ஏற்றி வைத்தார்கள், பழைய காவல்நிலையத்திற்கு. புதிய காவல் நிலையத்திற்கு அதுகூட நடக்கவில்லை. அதனால்தான் செல்லக்குமார் அழைக்கப்படவில்லை. நான் செல்லக்குமார் போன்றவர்களை யெல்லாம் அழைக்கப்படவில்லை என்பதற்காக வருத்தப்படுவேனே தவிர, அதற்காக மகிழ்ச்சியடைபவன் அல்ல என்பதையும் அவர் உணர வேண்டும்.

உதவி ஆய்வாளர் சம்பத்துக்கு விருது வழங்கப்படும்

உதவி ஆய்வாளர் சம்பத்துக்குப் பதவி உயர்வு கொடுக்கப் படவில்லை என்று சொன்னார். சம்பத் செய்தது, வெடிகுண்டு இருக்கிற இடத்தைப் போய்க் கண்டுபிடித்தார் என்பது. அதோடு அந்த வெடிகுண்டு வெடிக்குமா, வெடிக்காதா என்று பார்த்தார் என்கிற ஒரே தீரச் செயல்தான். வேறு ஒன்றும் இல்லை. சந்திரசேகரனுக்கு கோயம்புத்தூர் சம்பவத்தில் கொடுத்தோம் என்றால், அவர், துப்பாக்கிப் பிரயோகத்தின் இடையிலே புகுந்து, வீரசாகசம் புரிந்து, அங்கே சமாளித்தார் என்பதற்காகத்தான் அவருக்கு பதக்கம் எல்லாம் கொடுத்தோம்; பதவி

உயர்வு கொடுத்தோம். இவர் அப்படி அல்ல. இருந்தாலும்கூட, சம்பத் அவர்களைப் பாராட்டி 1,500 ரூபாயும், ஒட்டுமொத்தமாக அந்தக் குழுவினருக்கு 18 ஆயிரம் ரூபாயும் வெகுமதி வழங்கப்பட்டது. இவருக்குக் குடியரசுத் தலைவர் விழாவில் விருது அல்லது பதக்கம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நமது ஜி.கே.மணி அவர்கள் வன்னிய சங்க வழக்குகள் எல்லாம் வாபஸ் ஆகவில்லை என்று சொன்னார். சில வழக்குகள் என்று சொன்னார். சில வழக்குகள் ஜி.ஓ.வுக்குப் பிறகு, நீதிமன்றத்திலே சில தேக்கத்தின் காரணமாக வாபஸ் ஆகாமல் இருக்கலாம். அவை தவிர, வாபஸ் செய்யவேண்டும் என்று எல்லாவற்றுக்கும் பொதுவான உத்தரவு போட்டாகிவிட்டது.

வன்னிய சங்க வழக்குகளைச் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கப்படும்

1986 முதல் 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை, 722 வழக்குகள் அந்தச் சங்கத்தின் மீது இருந்தது அந்த ஆட்சியில். அவற்றில் நீதிமன்ற நிலுவையில் இருந்தது 409. எல்லாவற்றையும் சேர்த்து மூன்றே மாதங்களில், அரசு ஆணை எண்.854, பொதுத்துறை, தேதி 1-8-1996ன்படி, திரும்பப்பெற ஆணையிடப்பட்டுவிட்டது.

இவை தவிர, புலன் விசாரணையில் இருந்தவை என்ற அடிப்படையில் 72 வழக்குகளில் மேல் நடவடிக்கை கைவிடப்பட்டுவிட்டது. 137 வழக்குகள் பல்வேறு காரணங்களுக்காக நீதிமன்றத்திற்கே செல்லாமல் கைவிடப்பட்டன. 104 வழக்குகள் அரசிடம் கோரிக்கை வைக்கப்படுவதற்கு முன்பாகவே நீதிமன்றத்தாலும், காவல்துறையினராலும் முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, ஏதாவது மிச்சம் மீதி இருந்தால், அதைக் குறிப்பாகச் சுட்டிக்காட்டினால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊர்வலங்கள் அனுமதிக்கு இரண்டு, மூன்று இடங்களை குறிப்பிடவேண்டும்.

இரா. தாமரைக்கனி : எங்களுடைய பகுதியிலே, ஜாதிக் கலவரம்.

முதல்வர் கலைஞர் : அதுவும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.

சென்னையில், ஊர்வலம் நடத்த அனுமதியில்லையென்று, பழனிசாமி அவர்களும் சொன்னார்கள். ஹேமச்சந்திரன் அவர்களும் அன்றைக்குப் பேசினார்கள்.

சென்னை மாநகரத்திலே போக்குவரத்து நெருக்கடி காரணமாக, சில வரைமுறைகளைக் காவல்துறையினர் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இருந்தாலும்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, 1999ஆம் ஆண்டு அனுமதி கோரிய நிகழ்வுகள் 75. அந்த 75-லே 56 நிகழ்வுகளுக்கு, அவர்கள் கோரிய இடத்திலேயே அனுமதி தரப்பட்டிருக்கிறது. 19 நேர்வுகளிலேதான், அனுமதி தரப்படவில்லை. இந்த ஆண்டு, ஜனவரி முதல், 30-4-2000 வரை, அதே கட்சியினர் 33 முறை அனுமதி கோரினார்கள். 28 நிகழ்வுகளில் அவர்கள் கோரிய இடம்தான் தரப்பட்டிருக்கிறது. 5 நிகழ்வுகளிலே மாத்திரம்தான் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இனிமேல், காவல்துறையினருக்கு சொல்லி இருக்கிறேன். அனுமதி கேட்கும்போது, இரண்டு இடங்களைக் குறிப்பிட்டு, அல்லது மூன்று இடங்களைக் குறிப்பிட்டு, இந்த மூன்றில் எந்த இடத்தை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள் என்று அவர்களுக்கு எழுதுங்கள். அந்த மூன்றில் ஒன்றையோ, இரண்டில் ஒன்றையோ எடுத்துக் கொள்ளட்டும் என்று நான் காவல்துறையினருக்கு சொல்லி இருக்கிறேன். எனவே, அந்தப் பிரச்சினை எழாது.

சுப்பராயன் அவர்கள் மோகனாம்பாள் கொலையும், அஞ்சலை கொலையும் என்பது பற்றிப் பேசினார்கள். ஏதோ ஒரு பழைய காலத்து நாவலுக்கு தலைப்பு மாதிரி பேசினார்கள். அவர்களுக்கு எழுதி அனுப்பப்பட்ட அந்த முறையீட்டைப் படித்தால் உருக்கமாக இருக்கிறது. நான் இல்லை என்று மறுக்கவில்லை. எப்பொழுதுமே, அந்த முறையீடுகளையும், மனுக்களையும் படித்துவிட்டு, அதை முழுவதும் நாம் உண்மை என்று நம்பிவிட முடியாது. ஆனால், உண்மை அல்ல என்றும் நான் எடுத்துக்கொள்ளவில்லை என நான் சுப்பராயன் அவர்களுக்குச் சொல்கிறேன். ஆனால், இந்த முருகேசன் வழக்கைப் பொறுத்தவரையில், குற்றப்பத்திரிகையாகவே தாக்கல் செய்யப்பட்டு விட்டாகிவிட்டது. இங்கே சொன்னார்கள், கடைசி நேரத்திலேதான் எங்களுக்கு அனுப்புகிறார்கள். அதுவரையிலும் அனுப்புவதில்லை என்று.

அதேமாதிரி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தபிறகு, இந்த விவரங்களை சுப்பராயன் அவர்கள் என்னிடத்திலே இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி நான் விசாரித்தேன். இந்த வழக்கிலே, அந்த முருகேசன் தன்னுடைய மைத்துனியையும் கல்யாணம் செய்துகொள்வதற்கு விரும்பியிருக்கிறார். அதனாலே ஏற்பட்ட தகராறு; அதனாலே விளைந்த கொலை. அது ரங்கோன் ராதா மாதிரி, நடந்திருக்கிறது. எனக்கு தந்த தகவலை சொல்கிறேன். தகவல் வேறாக இருந்தால் திருத்திக் கொள்ளலாம். ஆனால் குற்றப் பத்திரிகை வரையிலும் வந்தாகி விட்டது.

முருகேசன் தனது மைத்துனியையும் திருமணம் செய்து கொள்ள விரும்பியதாகவும், அதைத் தொடர்ந்து அவர் மனைவியைக் கொலை செய்துள்ளார் என்றும் காவல்துறை கூறுகிறது.

கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி தகராறு நடந்ததற்கும், கொலை நடைபெற்றதற்கும் சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்து, அது குற்றவியல் நடுவர் முன்னால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முருகேசனிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டு, அவரிடமிருந்து, இறந்துபோன அந்தப் பெண்மணியினுடைய காது தோடும் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த வழக்கிலே விசாரணை முடிந்து குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டு, வாய்தா 8-6-2000 அன்று போடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை குறித்து ஏற்கெனவே, ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினர் புகார் செய்ததன் பேரில், சி.பி.சி.ஐ.டி. இந்த வழக்கை மேற்பார்வை செய்து, ஒழுங்காக விசாரணை நடைபெற்றதாகவும், அவர்களும் ஒரு மதிப்பீடு செய்து, விசாரணை செய்து, ஒரு அறிக்கையை அவர்களும் கொடுத்திருக்கின்றார்கள்.

அதைப்போலவே, விழுப்புரம் மாவட்டத்திலே, அஞ்சலை என்ற பெண் காவல்துறையினர் மிரட்டியதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தார்.

இந்த வழக்கில் அஞ்சலை ராஜா என்பவரை காதலித்தார். காதலித்து அது கருவுறுகிற வரையிலே வந்து, அதற்கு பிறகு அந்தக் காதலன் மறுத்துவிட்டதன் காரணமாக, இறந்துவிட்டாரே தவிர, காவலர் மோசமாக பேசினார்கள், ஆகவே அவர் தன்னை கொலைக்கு உள்ளாக்கிக் கொண்டார் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. இருந்தாலும்கூட, அந்த வழக்கிலே காவல் துறையினருக்கு சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

அஞ்சலையின் அண்ணன் கொடுத்த முதல் புகாரில், காவல்துறையினர் மீது எந்தத் தவறும், அஞ்சலையினுடைய அண்ணன் கூறவில்லை. அந்தப் புகார் மனுவிலே எந்தத் தவறும் கூறவில்லை.

மேலும் இதுகுறித்து ஐயப்பாடுகள் எழுமேயானால், முருகேசன் சம்பவத்திலே குற்றப்புலனாய்வுத் துறை உள்ளூர் காவலர்கள் செய்த விசாரணை முறையாக நடைபெற்றதா என்பதை சரிபார்த்ததைப் போல,

விழுப்புரம் நிகழ்வு பற்றியும் குற்றப்புலனாய்வுத் துறைக்கு ஆணையிட்டு சரிபார்க்கச் சொல்கிறேன் என்கிற உறுதியை மாத்திரம் நான் சுப்பராயன் அவர்களுக்கு இங்கே தெரிவிக்கின்றேன்.

உறுப்பினர் கே.ஆர். இராமசாமி இங்கே எழுப்பிய, பட்டு குருக்கள் கொலை. அதிலேயும் பல கோணங்களிலே போலீசார் துருவித் துருவி ஆராய்கிறார்கள். அதற்கு 3,4 கோணங்கள் இருக்கின்றன. ஒரு கோணம் காதல் கோணம். ஆகவே, காதல் இல்லாத கொலை என்று எதுவும் கிடையாது.

கே.ஆர். இராமசாமிக்குத் தெரிந்திருக்கும். தெரியாமல் இல்லை. இருந்தாலும், காதலை மறைத்துவிட்டு, பாக்கி விஷயங்களை மாத்திரம் அவர் இங்கே பேசியிருக்கிறார். இதிலே புகழேந்தி என்கிறவருக்கும், அவருடைய கூட்டாளிகளுக்கும் இந்தக் கொலைக்குக் காரணமாக இருப்பார்களோ என்ற சந்தேகமும் அதிகமாக ஏற்பட்டுள்ளது. இதற்கான நோக்கம் எதுவாக இருக்கும் என்று பல கோணங்களிலும் காவல்துறையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

சி.பி.சி.ஐ.டி. போலீசும் இதை மிகத் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. விரைவில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கக்கூடும் என்ற உறுதியை காவல்துறை எனக்கு அளித்துள்ளது என்பதையும் நான் நம்முடைய கே.ஆர். இராமசாமி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் பற்றி எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசினார்கள். அவர்களை எல்லாம் குண்டர் சட்டத்திலே கைது செய்யவேண்டும் என்று கூறினார்கள். இப்போதே பல பேர் குண்டர் காவல் சட்டத்திலே கைது செய்யப்படுகிறார்கள்.

நாம் மதுவிலக்குக் கொள்கையிலே தீவிரமாக இல்லை என்று இங்கே சொல்லப்பட்டது. ஏன் இல்லை?

எம்.ஜி.ஆர். காலத்திலேயிருந்து ஒரு புதிய முறை மதுவிலக்குக் கொள்கையிலே வகுக்கப்பட்டு இன்றளவும் அதுவே நடைமுறையிலே இருந்து வருகின்றது. அதன்படி, இந்த ஆண்டு வரையிலே நமக்குக் கிடைத்திருப்பது, இந்த ஆண்டு மாத்திரம் நமக்கு இந்த ஆயத்தீர்வை கிடைத்திருப்பது ஏலம் உட்பட 1,830 கோடி ரூபாய். விற்பனை வரி மூலமாக 1,000 கோடி. ஆக, 2,800 கோடி ரூபாய்க்கு மேல் இந்த ஆயத் தீர்வை மூலமாக தமிழக அரசுக்கு கிடைத்திருக்கின்றது. இதனுடைய சந்துபொந்துகளிலே நுழைந்து கொண்டு கள்ளச் சாராய வியாபாரிகள் நடத்துகின்ற கூத்துகளை, திருவிளையாடல்களை இந்த அரசு இப்போது மிக வன்மையான நடவடிக்கை எடுத்து கண்டித்திருக்கின்றது, தண்டித்திருக்கின்றது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

1999ஆம் ஆண்டு மாத்திரம் 4,521 வாகனங்கள் கைப்பற்றப் பட்டன. 2000 ஆண்டில் 31-3-2000 வரை 1,811 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. 1991ஆம் ஆண்டில் கள்ளச் சாராயம் காய்ச்சுவோருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 4,20,778. கைது செய்யப்பட்டோர் 3,91,306 பேர். இதில் பெண்கள் 94,760 பேர் என்பதுதான் வேதனைக்குரியது.

ஆயத்தீர்வை தீர்ப்பினைத் தடுக்கும் பொருட்டு, இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மதுவகை சில்லரை விற்பனை கடைகளில் தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 1999ஆம் ஆண்டில் உரிமை மீறியதற்காக 7,878 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதில் சட்ட விரோதமாக பார் நடத்திய குற்றத்திற்காக பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 2,923. இவற்றையும் மீறி இந்தத் தவறு நடந்து கொண்டுதான் இருக்கிறது என்று உறுப்பினர்கள் கேட்பது எனக்குப்

புரியாமல் இல்லை. இருந்தாலும்கூட, இத்தனையையும் மீறி நடைபெறுகின்ற இந்தத் தவறுகளை அறவே ஒழித்துக்கட்ட நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே கண்ணோட்டத்தோடு, இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற முயற்சியிலே ஈடுபட வேண்டும்.

அந்த முயற்சியிலே நாம் இன்றைக்கு பெருமளவு வெற்றி பெற்றிருக்கிறோம். ஆனால் முழுமையாக வெற்றி பெறவில்லை என்பதை ஒத்துக்கொண்டு, எல்லோருடைய ஒத்துழைப்பும் எனக்குத் தேவை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.